00193

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களிற்கான பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் மட்டம் - 05 - 2022/2023

தொடர்மதிப்பீட்டுப் பரீட்சை II – 2022/2023

**LLU5712 – பகிரங்க சர்வதேச சட்டம்**

காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 03.12.2023 நேரம்: பி.ப. 03.30 – பி.ப 04.30

வினாக்களின் எண்ணிக்கை – இரண்டு (02)
ஒரு (01) வினாவிற்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

(1) நாடுகளின் உரிமைகளும் கடமைகளும் மீதான மொன்டிவீடியோ சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாரம்பரிய தேவைப்பாடுகள் அரசத்துவத்திற்கான அத்தியாவசியமான தராதரங்களாக நீண்ட காலமாக கருதப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு மேலதிகமாக, அரசத்துவத்தை கோருவதற்கான முக்கிய தீர்மானக் காரணியாக சர்வதேச அங்கீகாரத்தின் மீது சமகால ஆராய்வுகள் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளன.

மேற்குறிப்பிட்டுள்ள கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

பொருத்தமான தீர்ப்புச்சட்டங்கள் மற்றும் சமகால எடுத்துக்காட்டுக்கள் என்பனவற்றுடன் தொடர்புபடுத்தி நுணுக்கமாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

(2) மாயா என்பவளும் அவளது நண்பன் கியான் என்பவனும் ஹர்மோனியா எனும் நாட்டின் பிரஜைகளாவர் என்பதுடன், இவர்கள் கொன்கோர்டியா எனும் நாட்டிற்கு பயணித்தனர். இவர்களது பயணத்தின் போது கொன்கோர்டியா நாட்டில் அதன் அரசாங்கத்திற்கும் 'யூனிட்டி' என்று அழைக்கப்பட்ட கிளர்ச்சிக் குழு ஒன்றிற்கும் இடையே அரசியல் அமைதியின்மை காணப்பட்டது. உள்நாட்டின் வரலாற்றினால் கவரப்பட்ட கியான் கொன்கோர்டியாவின் பாதுகாப்பு அதிகாரசபைகளால் தடைசெய்யப்பட்ட இடம் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்ட வரலாற்றுத்தலம் ஒன்றை சென்று பார்வையிடத் தீர்மானித்தான். எவ்வாறாயினும் கியான் பாதுகாப்பு அதிகாரசபைகளின் எச்சரிக்கைகளைக் கவனியாது வரலாற்றுத் தலத்திற்கு சென்றான். கியான் "யுனிட்டி" இயக்க குழு உறுப்பினர்களால் கைப்பற்றப்பட்டு குத்துக்காயத்தால் மரணமானான். இதன் விளைவாக கியானின் குடும்பம் பெரும் வேதனைக்கும் இழப்பிற்கும் ஆளானது. சமூகநிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ளும் போது கொன்கோர்டியாவின் முக்கிய அரசாங்க அலுவலர் ஒருவராலும் அவரது உடனிருந்தோராலும் குழுவாக மாயாவை பாலியல் வன்புணர்வு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. எதிர்பாராத சம்பவத்திற்கு முகம் கொடுத்தமையால் மாயா நிலைகுலைந்தாள். சர்வதேச சட்டத்தின் நோக்கில் கியான் மற்றும் மாயா ஆகியோரிற்கு ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் சட்ட கருத்தொன்றை வழங்குவதற்கு ஹர்மோனியா நாட்டின் சட்ட ஆலோசகராக நீர் நியமிக்கப்பட்டுள்ளதாகக் கருதுக.

இச் சம்பவங்களிற்கு சர்வதேச சட்டத்தில் 'நியாயதிக்கம்' என்பதன் பிரயோகத்தின் மீது உமது கருத்தை பொருத்தமான தீர்ப்புச்சட்டங்கள் மற்றும் நடைமுறை எடுத்துக்காட்டுக்கள் என்பவற்றைக் குறிப்பிட்டு தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -